ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2096/26 - 2018 නොවැම්බර් මස 07 වැනි බදාදා - 2018.11.07

*2096/26 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், அமைச்சரவை உறுப்பினரல்லாத அமைச்சரொருவராக நியமிக்கப்பட்டுள்ள பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கு, அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (2)ஆம் உப உறுப்புரையின்வண்ணம் பொறுப்பளிக்கப்படும் அமைச்சும், அதன் விடயங்களும், பணிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், 2018, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதியிலிருந்து இதன்கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொல்லப்பட்ட அமைச்சின் விடயங்களும் பணிகளும், சொல்லப்பட்ட அமைச்சுக்குரிய திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் ஆகியனவும் இருக்குமென என்னால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2018, நவெம்பர் 07.

1A - G 27791 — 372 (2018/11)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை

### (1) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

| நிரல் I | நிரல் II | நிரல் III |
| --- | --- | --- |
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத் தாபன விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் மதிப்பிடலும் | 1. இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் | • வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற் றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் (1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) |
| 2. பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகள், இயற்கை வாயு என்பனவற்றின் இறக்குமதி, சுத்திகரிப்பு, களஞ்சியப் படுத்தல், விநியோகம் மற்றும் விற்பனை | 2. வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சியத் தொகுதி | • பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் சட்டம் (2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) |
| 3. பெற்றோலிய உற்பத்தியும் சுத்தி கரிப்புத் தொடர்பான பணிகளும் | 3. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திப் பணியகம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்து ரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 4. பெற்றோலிய ஆராய்ச்சி சம்பந்தமான நடவடிக்கைகள் | 4. வரையறுக்கப்பட்ட பொலிப்ரோ லங்கா (தனியார்) கம்பனி | |
| 5. பெற்றோலிய உற்பத்திகள் முதலிய வளமூலங்களிலிருந்து வாயு உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும் | | |
| 6. எரிபொருள் வழங்கலும் விநியோகம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியும் | | |
| 7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறு வனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.